(அண்டரென்பது) பகைஞர்- தேவர் - இடையருக்கும்பெயர். (சண்டனென்பது) சதயநக்ஷத்திரம்-மூன்றுசூறுக்கும்பெயர். (கண்டலென்பது) தாழை-முள்ளிச்செடிகளுக்கும்பெயர்.(கனைதலென்பது) அழைத்தல்-சத்தத்துக்கும்பெயர். (பண்டமென்பது) பொன்-ப

ல்பண்டத்துக்கும்பெயர். (பாகென்பது) பங்கு-குழம்பு - பாக்குக்கும்பெயரொன்றவாறு. (௮௰)

விண்ணென்பமாயோன்வெற்புமேகமேமூங்கில்காற்றாம் ..*
தொண்ணென்பபழமையொன்பான் றொழும்பொடுவழிபா
தண்ணென்பகுழாமேயவீணைதடிபடைமிதுனமொந்திடாமே
வண்ணென்பசங்குகுற்றம்வளையளிவாளியம்போ ... .. *

(இதன்பொருள்.)

(விண்ணென்பது) திருமால்-மலை-மேகம்- மூங்கில்-காற்றுக்கும்பெயர். (தொண்டென்மது) பழமை-ஒன்பது -அடிமை-வழிபடுதலுக்கும்பெயர். (தண்டென்பது) துளையுடைப்பொருள் -வீணை தடி-சேனை-மிதுனவிராசி- ஒருவனுக்கும்பெயர். (வண்டென்பது) சங்கு-குற்றம்-கைவளை-வண்டு-அம்புக்கும்பெயரொன்றவாறு.(௮௧)

உண்டையேதிரளையாகுமுறுபடைவகுப்புமென்ப ... கை
தொண்டையாதொண்டைக்கோவ்வை தாங்கும்யானைத் துதிக்
கொண்டையேமயிர்முடிக்குமிலந்தையின்கனிக்குங்கூற்றாங்
கண்டிகைபதக்கம்வாகுவலயமேகலன்பெய்செப்பு ... ...*

(இதன்பொருள்.)

(உண்டையென்பது) திரண்டவடிவு-படைவகுப்புக்கும்பெயர் (தொண்டையென்பது) ஆதொண்டைச்செடி - கோவைக்கொடி-யானைத்துதிக்கைக்கும்பெயர். (கொண்டையென்பது மயிர்முடி-இலந்தைப்பழத்துக்கும்பெயர். (கண்டிகையென்பது) பக்கம்-தோளணி ஆபரணச்செப்புக்கும்பெயரொன்றவாறு. (௮௨)

தண்ணமோர்கட்பறைப்பேர்தறித்திடுமழுவுமாகும் .... *
வண்ணமேசந்தம்பண்பாமறையிராசியமேவேதம் .. ...*
பண்ணென்பபாட்டும்பண்ணும்பரிமாவின்கலணையும்பேர் *
மண்ணனுவொப்பனைப்பேர்முழவின்மார்ச்சனையுமாமே. *

(இதன்பொருள்.)

(தண்ணமென்பது) ஒருகட்பறை-பரசாயுதத்துக்கும்பெயர் (வண்ணமென்பது) அழகு-நிறம்- குணத்துக்கும்பெயர். (மறையென்பது) மறைவு-வேதத்துக்கும்பெயர். (பண்ணென்பது) இசைப்பாட்டு-பண்ணு குதிரைச்சேணத்துக்கும்பெயர்.(மண்ணென்பது) அணு-அலங்காரம்-மத்தளத்திற்பூசுமண்ணுக்கும்பெயர்-ஏ-று. ()

அணங்குநோயழகுதெய்வமாசைபெண்கொலைவருத்தந் ..*
அணங்கையேவிழாப்பேய்ககூத்தாமாதிரை நாளுஞ்சொல்லுங்
குணுங்கர்தோற்கருவிமாக்கள்குயிலுவரிழிஞர்முப்பேர்...[ங்
துணங்கறலிருள்விழாவாந்தோன்றலேசுதனுதன்பேர்......*

(இதன்பொருள்.)

(அணங்கென்பது) வியாதி-அழகு-தெய்வம்-ஆசை-பெண்-கொல்லுதல்-பிரயாசத்துக்கும்பெயர். (துணங்கையென்பது) திருவிழாபேய்க்கூத்து-திருவாதிரைநக்ஷத்திரத்துக்கும்பெயர். (குணுங்கரென்பது) தோற்கருவியாளர்-நரம்பிலுயகருவிக்குரியோர் -சண்டாளருக்கும்பெயர். (துணங்கறலென்பது) இருள் - திருவிழாவுக்கும்பெயர். (தோன்றலென்பது) மகன்-அரசனுக்கும்பெயர்-எ-று

புணரியேவாரிநீரிற்பொருதிரைகளைமுப்பேராம் ... ... *
பணிலமேசலஞ்சலஞ்சங்கிருபெயர்பகரலாமே .. ... *
கணிவேங்கைமரமதாகுங்கழனிசூழ்மருதமும்பேர்... ...*
பணியேதோற்கருவிவார்த்தைபாம்புசெய்தொழிலுமாமே*

(இதன்பொருள்.)

(புணரியென்பது) கடல்-அலை-கரைக்கும்பெயர். (பணிலமென்பது) வலம்புரியாயிரஞ்சூழ்ந்தசங்கு-சங்குக்கும்பெயர். (கணியென்பது) வேங்கைமரம் - மருதநிலத்துக்கும்பெயர், (பணியென்பது) தோற்கருவி-சொல்-பாம்பு- தொழிலுக்கும்பெயரொன்றவாறு.

பாணியூர்நீர்கையோசைபற்றுக்கான்போதுநாடு ... ...*
சேணுறுசோலைபண்டஞ்சிறந்தபல்லியம்பன்னொன்றுந்...*
தாணும்வசயிலங்குற்றிசங்கரனிலைதூணேம்பேர் ... .. *
வேணியேசடைவிசும்பாம்வியாளமேபுலியும்பாம்பும் ... *

(இதன்பொருள்.)

(பாணியென்பது) ஊர்- நீர்- கை- சத்தம்- பற்று- காடு- காலம் நாடு- சோலை- பலபண்டம்- வாச்சியப்போதுவுக்கும்பெயா. (தாணுவென்பது) மலை - குற்றி- சிவன் - நிலைபெறுதல்- தூணுக்கும்பெயர். (வேணியென்பது) மயிர்சசடை-ஆகாயத்துககும்பெயர். (வியாளமென்பது) புலி- பாம்புக்கும்பெயரொன்றவாறு (அசா)

குண்டலங்குழைவிசும்பாங்குபேரனேதனதன்சோமன்... *
புண்டிலம்பரியூர்வட்டமந்திரியேயூகம்வண்டு ... ... *

கொண்டலெழிலிகீழ்காற்றுங்கோட்டியேவாயில்கூட்டம் ... *
மண்டலிபூனைபாம்புமண்ணொடுநாயுமாமே ... ... *

(இதன்பொருள்.)

(குண்டலமென்பது) குண்டலம் - ஆகாயத்துக்கும்பெயர். (குபேரனென்பது) குபேரன்- சந்திரனுக்கும்பெயர். (மண்டிலமென்பது) குதிரை- ஊர்- வட்டத்துக்கும்பெயர். (மந்தியென்பது) பெண்குரங்கு- வானரத்துக்கும்பெயர் (கொண்டலென்பது) மேகம்- கீழ்காற்றுக்கும்பெயர். (கோட்டியென்பது) வாயில் கூட்டத்துக்கும்பெயர் (மண்டலியென்பது) பூனை- பாம்பு - பூமி- நாய்க்கும் பெயரொன்றவாறு. (௮௭)

புண்டரீகந்திசையானைபுலிவண்டுகழுகுகஞ்சந் ... ... *
தண்டமேயானைசெலும்வழிதண்டாயுதங்குடைக்கால் ... *
பிண்டிநென்மாவசோகம்பிதாசிவன்பிரமனாரை ... *
கண்டகஞ்சுரிகைமுள்வாள்களமென்பகளாச்சோரப்பேர் .. *

(இதன்பொருள்)

(புண்டரீகமென்பது) தென்கீழ்த்திசையானை - புலி - வண்டு- கழுகு- தாமரைக்கும்பெயர். (தண்டமென்பது) யானைசெலும் வழி - தண்டாயுதம் - குடைக்காம்புக்கும்பெயர். (பிண்டியென்பது நென்மா- அசோகமரத்துக்கும்பெயர். (பிதாவென்பது, சிவன்- பிரமன் நாரைக்கும்பெயர். (கண்டகமென்பது) உடைவாள் முள்- வாளாயுதத்துக்கும்பெயர். (களமென்பது) களாச்செடி- திருட்டுக்கும்பெயரொன்றவாறு. (௮௮)

பண்ணவன்முனிவன்றேவன்பகர்குருவருகனற்பேர் ... *
தண்ணடைமருதஞ்சார்ந்தநாடெனவிரும்பாசாற்றும் ... *
வண்மையேவழங்கல்வாய்மைவளம்புகழ்வலியாமென்ப ... *
வொண்மையேமிகுதிநன்மையொழுங்கறிவழகைப்பேரோ. *

(இதன்பொருள்.)

(பண்ணவனென்பது) முனிவன் - தேவன்- குரு- அருகனுக்கும்பெயர். (தண்ணடையென்பது) மருதநிலத்தூர் - நாடுக்கும்பெயர். (வண்மையென்பது) கொடுத்தல்- உண்மை- வளமை - புகழ்- வலிமைக்கும்பெயர். (ஒண்மையென்பது) மிகுதி - நன்மை- ஒழுங்கு- அறிவு- அழகுக்கும்பெயரொன்றவாறு. (௮௯)

எண்ணென்பதெள்ளிலக்கமெளிமைசோதிடம்விசாரம் .. *
கண்ணிடங்கணுவேய்கண்ணுங்காஞ்சிமேகலையோர்பன்னனும் *
விண்முகிலசுவர்க்கம்வானும்விபுலம்பார்விரிவுமாம் ... ... *
பண்ணையேவயனீர்த்தாழ்வுமருதமாதர்பயிலும்பாடி .. *

(இதன்பொருள்.)

(எண்ணென்பது) எள்- இலக்கம் - எளிமை - சோதிட நூல் - ஆலோசனைகளும்பெயர். (கண்ணென்பது இடம்- மரகணு - மூங்கில- கண்ணுக்கும்பெயர் (காஞ்சியென்பது) மாதரிடையணியுமேகலைக்கோவை- ஓர்பன்னனுக்கும்பெயர் (விண்ணென்பது) மேகம்- தேவலோகம்- ஆகாயத்துக்கும்பெயர். (விபுலமென்பது) பூமி- அகலம் - பெருமைக்கும்பெயர் (பண்ணையென்பது) கழனி- குளம்- மருதநிலம் விலங்கின்படுக்கையிடத்துக்கும்பெய- எ-று.

காண்டம்படாதிரைகாடம்புகமண்டலங்கலன்பெய்செப்பு ... *
நீண்டகோன்முடிவுதூசுநீர்படைக்கலமீனாந்தாம் ... *
பாண்டிலேறூர்திவட்டம்பணைகட்டிலவிளக்குத்தாளம் ... *
ஈண்டென்பதிவ்விடத்தோடிப்படிசடிதியும்பேர் .. *

(இதன்பொருள்.)

(காண்டமென்பது) திரைச்சீலை- காடு- அம்பு- கமண்டலம் - ஆபரணம் வைக்குஞ்செப்பு- கோல முடிவு- வஸ்திரம்- நீர் - ஆயுதத்துக்கும்பெயர், (பாண்டிலென்பது) எருது- வாகனம்- வட்டவடிவு - மூங்கில - கட்டில்- விளக்கு- தாளத்துக்கும்பெயர் (ஈண்டென்பது) இவ்விடம்- இவ்வண்ணம்- சீக்கிரத்துக்கும்பெயரென்றவாறு.

அண்டசமுதலையோந்தியரணைபுள்ளுடும்புபல்லி ... *
நண்டுமீன்றவளையாமைநாகமிப்பியுமீராறுஞ் ... ... *
சண்டன்கூற்றலிவெய்யோனுந்தாள்கீழ்வுறுதாள்பாதமும் ... *
சுண்டையேசுண்டைகள்ளாஞ்சொர்க்கமேசுவர்க்கநங்கொங்கை

(இதன்பொருள்.)

(அண்டசமென்பது) முதலை-ஓணான்-அரணை- பறவை- உடும்பு- பல்லி-நண்டு-மீன்-தவளை-ஆமை-பாம்பு-சிப்பிக்கும்பெயர் (சண்டனென்பது) இயமன்-பேடி-சூரியனுக்கும்பெயர் (தாளென்பது) தாழ்ப்பாள் - பாதத்துக்கும்பெயர். (சுண்டையென்பது சுண்டைச்செடி-கள்ளுக்கும்பெயர். (சொர்க்கமென்பது) தேவலோகம்-முலைக்கும்பெயரென்றவாறு. (௩௨)

பணமென்பதரவின்பையும்பாம்பும்பொற்காசுமுப்பேர்.*
மணமென்பவாசநகூட்டம்வதுவையுமாகுமென்ப... ...*
பணவையேபரணும்பேயும்பையுளேசிறுமைநோயாம்[பேர்
நுணவையெண்ணெறுலைபிண்டி நுனியென்ப நுனிநுண்மைப்

(இதன்பொருள்.)

(பணமென்பது) பாம்பின்படம்-பாம்பு-பொற்காசுக்கும்பெயர். (மணமென்பது) வாசனை-கூட்டம்-கலியாணத்துக்கும்பெயர் (பணவையென்பது) பரண்-பிசாசத்துக்கும்பெயர். (பையுளென்பது) அற்பம்-வியாதிக்கும்பெயர்· (நுணவையென்பது) எண்ணெறுலை-மாவுக்கும்பெயர். (நுனியென்பது) கூர்மை-நுட்பத்துக்கும் பெயரொன்றவாறு. (௧௩)

ணகரவெதுகை - முற்றிற்று.

தகரவெதுகை.



மதலையேகொன்றைபிள்ளைமரக்கலங்கொடிஞ்சைதூணும்...*
சிதலைநோய்துணிசெல்லென்பசீதநீர்குளிர்மேகம்... ...*
பதலையோர்கட்பறைப்பேர்பருவரைதாழிக்கும்பா ... *
கதலியேவாழைதேறுகாற்றுடிதுவசநாற்பேர் ... ... *

(இதன்பொருள்.)

(மதலையென்பது) கொன்றைமரம்- மகன்- மரக்கலம்- கொடிஞ்சை-தூணுக்கும்பெயர். (சிதலையென்பது) வியாதி - சீலைத்துணி-கறையானுக்கும்பெயர். (சீதமென்பது) நீர்-குளிர்ச்சி - மேகத்துக்கும்பெயர் (பதலையென்பது) ஒருகட்பறை-மலை- சாடிக்கும்பெயர். (கதலியென்பது) வாழை - தேற்றுமரம் - காற்றுடி- விருதுக்கொடிக்கும்பெயரொன்றவாறு. (௧௪)

இதழ்பனையேடுபூவினிதழுதடெனவிம்முப்பேர் ... ... *
கதழ்வுவேகஞ்சிறப்பிங்களிசெருக்கொடுகுழம்பு ... *
மதுகமேயிருப்பையெட்டிமதுரமாந்தராவுமாமே ... *
சிதடனந்தகன்மூடன்பேர்திதிபக்கநிலைபேறும்பேர் ... *

(இதன்பொருள்.)

(இதழென்பது) பனையேடு - பூவிதழ் - உதட்டுக்கும்பெயர்

(கதழ்வென்பது) சீக்கிரம்- சிறப்புக்கும்பெயர். (களியென்பது) களிப்பு-குழம்புக்கும்பெயர். (மதுகமென்பது) இருப்பைமரம்- எட்டிமரம்- தித்திப்பு- பொன்முதலியவெழுவகைலோகத்தொன்றுக்கும்பெயர் (சிதடனென்பது) குருடன்- மூடனுக்கும்பெயர் (திதியென்பது) பிரதமைமுதலியதிதி - நிலைபெறுதலுக்கும்பெயரொன்றவாறு (௬௫)

ஆதனுயிரோரறிவிலானங்கிநெருப்புச்சட்டை ... *
போதகம்யானைக்கன்றாம்பேதையுமிளமைதகும்பே ... *
ஏதந்துன்பங்குற்றம்பேரீமமம்பாணங்கடன் ... ... *
சூதன்தேர்ப்பாகன்சூதன்சுவேதம்வேர்வுவெண்மை ... *

(இதன்பொருள்.)

(ஆதனென்பது) உயிர்- அறிவிலானுக்கும்பெயர். (அங்கியென்பது) நெருப்பு- சட்டைக்கும்பெயர் (போதகமென்பது) யானைக்கன்று- இளமைத்தன்மைக்கும்பெயர். (ஏதமென்பது) துன்பம்- குற்றத்துக்கும்பெயர். (ஈமமென்பது) சுடுகாடுவிறகுக்கும்பெயர் (சூதனென்பது) தேர்ப்பாகன் - சூதாடுவோனுக்கும்பெயர். (சுவேதமென்பது) வேர்வை -வெண்மைக்கும்பெயரொன்றவாறு (௬௬)

சூதமாமரமேவண்டுசூதாடனிரதந்தோன்றல் ... ... *
சூதகமசுத்தந்தோகைமார்தோயாப்பூப்பாம் ... ... *
பூதமாலிறந்தகாலம்புனிதமைம்பூதஞ்சீவன் ... ... *
மாதவந்தவம்வசந்தம்வாதமேதர்க்கங்காற்றும் ... ... *

(இதன்பொருள்.)

(சூதமென்பது) மாமரம்- வண்டு- சூது- இரசம்- பிறப்புக்கும் பெயர். (சூதகமென்பது) அசுத்தம்- மகளிர்துடக்குக்கும்பெயர். (பூதமென்பது) ஆலமரம்-இறந்தகாலம்-சுத்தம்-பிருதிவிமுதலியவைம்பூதம்- உயிருக்கும்பெயர். (மாதவமென்பது) தவம்- வசந்தகாலத்துக்கும்பெயர். (வாதமென்பது) தருக்கம் - காற்றுக்கும் பெயரொன்றவாறு. (௬௭)

மதன்வலிவேள்வனப்பாம்வலித்தலேவளைத்தல்பேசல் ... *
பதங்கம்புட்பொருவிட்டிற்பேர்பலிபூசைபிச்சைசோறுஞ் *
சிதம்விண்மீன்ஞானம்வெள்ளைசெயமுறப்பட்டதாமே ... *
நிதம்பமேயல்குலென்பமலைப்பக்கமும்பேர். ... *

(மதமென்பது) வலிமை- மன்மதன் - அழகுக்கும்பெயர். (வளித்தலென்பது) வளைத்தல்- பேசலுக்கும்பெயர். (பதங்கமென்பது) பறவைப்பொது- விட்டிற்பறவைக்கும்பெயா. (பலியென்பது) பூசை- பிச்சை- நீற்றுக்கும்பெயர். (சிதமென்பது) நட்சத்திரம் ஞானம்- வெண்மை- சயமுறப்படுதலுக்கும்பெயர். (நிதம்பமென்பது) அலகுல்- மலைப்பக்கத்துக்கும்பெயரொன்றவாறு. ()

சதியிரோகிணிகற்பாட்டிவஞ்சனைதாளவொற்று ... ... *
விதியென்பவினையயன்பேர்வேட்டுவன்மகநாள்வேடன் .. *
பதியிறைகேள்வனூராம்பதுக்கையேபாறைதூறு ... *
பிதிர்கதைநொடிதூவற்பேர்பிண்டமேதிரளைபிச்சை ... *

(இதன்பொருள்.)

(சதியென்பது) உரோகிணிநக்ஷத்திரம்- கற்புடைமகள் - கபடம்- தாளவொற்றுக்கும்பெயர். (விதியென்பது) தொழில் - பிரமனுக்கும்பெயர். (வேட்டுவனென்பது) மகநக்ஷத்திரம் - வேடனுக்கும்பெயர். (பதியென்பது) அரசன்- நாயகன் - ஊருக்கும்பெயர். (பதுக்கையென்பது) பாறை- சிறுதூறுக்கும்பெயர் (பிதிரென்பது) கதை -வகநொடி - தூவலுக்கும்பெயர். (பிண்டமென்பது) திரட்சி- பிச்சைக்கும்பெயரொன்றவாறு. (௯௬)

ஆதியேமுதனேரோடலருகன்மாலீசன்வேதன் ... ... *
பூதியம்புவியுடற்பேர்பொம்மலேபொலியுஞ்சோறும் ...*
பாதிரிபாடலப்பேர்பணைத்தெழுமூங்கிற்கும்பே ... ... *
ரேதியாயுதம்வாளென்பவிழைநூலாபரணமாமே ... ... *

(இதன்பொருள்.)

(ஆதியென்பது) முதல-நேரோடல்-அருகன்-திருமால்- சிவன் பிரமனுக்கும்பெயர் (பூதியமென்பது) பூமி - சரீரத்துக்கும்பெயர். (பொம்மலென்பது) மங்கலம் - சோற்றுக்கும்பெயர். (பாதிரியென்பது) பாதிரிமரம்-மூங்கிலுக்கும்பெயா. (ஏதியென்பது) ஆயுதம் - வாளாயுதத்துக்கும்பெயர். (இழையென்பது) நூல- ஆபரணத்துக்கும்பெயரொன்றவாறு (௯௭)

சாதியேபிரம்புகள்ளோர்தருசிறுசண்பகப்பேர் ... ... *
போதஞானந்தோணிப்பேர்புகல்குதிருடல்சொலவெற்றி.. *

யோதிபெண்மயிரோபூனேயோந்திமெஞ்ஞானம்வெற்பா *
மோதிமமன்னம்வெற்பாமுருத்தலேதோற்றல்கோபம் .. *

(இதன்பொருள்)

(சாதியென்பது) பிரம்பு- கள்- தேக்கமரம்- சிறுசண்பகத்துக்கும்பெயர். (போதமென்பது) ஞானம் மரக்கலத்துக்கும்பெயர். (புகலென்பது) தானியக்கதிர் சரீரம்- சொல்-வென்றிக்கும்பெயர். (ஓதியென்பது) கூந்தல்- பூனை- ஓணன்- ஞானம்- மலைக்கும் பெயர் (ஓதிமமென்பது) அன்னப்பட்சி-மலைக்கும்பெயர் (உருத்தலென்பது) மூளாதல்-கோபத்துக்கும்பெயரொன்றவாறு. (௱௧)

சுதைமகள்கறவாத்தேனுசுண்ணச்சாந்தமுதநாற்பேர் ... *
புதையென்பகணையின்கட்டும்புதுமையுமறைவுமுப்பேர் . *
மதுவென்பறவுந்தேனும்வசந்தகாலமுமாமென்ப ... *
கதைதண்டாயுதமேவார்த்தைகாரணமிம்முப்பேரே ... *

(இதன்பொருள்.)

(சுதையென்பது) மகள்- உதைகாற்பசு- சுண்ணச்சாந்து- அமிர்தத்துக்கும்பெயர். (புதையென்பது) அம்பின்கட்டு - புதுமை- மறைவுக்கும்பெயர். (மதுவென்பது) கள் - தேன் - வசந்தகாலத்துக்கும்பெயர. (கதையென்பது) தண்டாயுதம்- சொல்- காரணத்துக்கும்பெயரொன்றவாறு. (௱௨)

சீதைபொன்னுங்காணியுழுபடைச்சால்சீராமன்றேவி ... *
மேதைதோல்புதனிறைச்சிமிக்கபேரறிவுகள்ளாம் ... ... *
கோதைமுன்கைத்தோற்கட்டேகுழலூர்க்காற்றொழுங்குசேர
னோதைபேரொலிமதிற்பேருக்கந்தீயிடையானேறு ... *

(இதன்பொருள்.)

(சீதையென்பது)பொன்னுங்காணி-உழுபடைச்சால்-சீதாதேவிக்கும்பெயர், (மேதையென்பது) தோல்- புதன்- இறைச்சி - பேரறிவு- கள்ளுக்கும்பெயர- (கோதையென்பது) முன்கைத்தோற்கட்டு- பெண்மயிர் - பூமாலை- காற்று- ஒழுங்கு - சேரனுக்கும்பெயர. (ஓதையென்பது) ஆரவாரம் - மதிலுக்கும்பெயர். (உககமென்பது) நெருப்பு- இடை- பசு- எருதுக்கும்பெயரொன்றவாறு. ()

அத்தம்பொன்பாதிகைகண்ணாடிசொற பொருள்காடேர்நா
புத்தகங்கோசமென்பசித்திரப்படாமுமாமே ... ...(...[ன்

நத்தமேயிருளூருநந்துடனிரவுநாற்பேர் ... ... *
துத்தம்யாழிசைநாய்பால்வயிறுகண்மருந்துஞ்சொல்லும் *

(இதன்பொருள்.)

(அத்தமென்பது) பொன்- பாதி- கை- கண்ணடி - சொற்பொருள்-காடு- ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர். (புத்தகமென்பது எழுதுபுத்தகம்- எழுத்துச்சீலைக்கும்பெயர். (நத்தமென்பது) இருள்-ஊர்-சங்கு-இராத்திரிக்கும்பெயர், (துத்தமென்பது யாழிலோர் நரம்பு நாய்-பால்-வயிறு-கண்மருந்துக்கும்பெயரொன்றவாறு.()

அத்தென்ப வரைஞாண்செம்மை யசைச்சொலோடிசைப்பு
நாற்பேர், தொத்துப்பூங்கொத்துத்தொண்டாந்தூம்புவேய்
துளைமரக்கா, றத்தைதழுத்தாள்கிளிக்காந்தழல்கிளிகடிகோல்
செந்தீ, யுத்தரமூழித்தீமேலொடுமறுமொழிவடக்கு ... *

(இதன்பொருள்.)

(அத்தென்பது) அரைநாண்- சிவப்பு- அசைச்சொல்- கூடிநிற்றலுக்கும்பெயர். (தொத்தென்பது) பூங்கொத்து - அடிமைக்கும்பெயர். (தூம்பென்பது) மூங்கில்-உட்டுளைப்பொருள்-மரக்காலுக்கும்பெயர். (தத்தையென்பது) அக்காள் - கிளிக்கும்பெயர். (தழலென்பது) கிளிகடிகோல் - நெருப்புக்கும்பெயர். (உத்தரமென்பது) வடவாமுகாக்கினி- மேல்- எதிர்மொழி வடக்குக்கும்பெயரொன்றவாறு. (௩௫)

கூத்தனேயுயிர்நடன்பேர்குலங்குடிகோயில்கூட்ட ... ...*
ஊழ்த்தலேநினைத்தல்செவ்வியுறுபதனழிவுமுப்பேர் ... *
பாத்தென்பகஞ்சிசோறுபகுத்திடல்வகுத்தமுப்பேர் ... *
தீர்த்தமேவிழாவுநீருந்தீர்த்தனேயருகனுசான் ... . *

(இதன்பொருள்.)

(கூத்தனென்பது) உயிர்-நாடகனுக்கும்பெயர். (குலமென்பது) சாதி- அரசன்மனை- கூட்டத்துக்கும்பெயர். (ஊழ்த்தலென்பது) நினைத்தல்- பதம்- பதனழிவுக்கும்பெயர். (பாத்தென்பது) கஞ்சிசோறு - பங்கிடலுக்கும்பெயர். (தீர்த்தமென்பது) திருவிழா- நீருக்கும்பெயர். (தீர்த்தனென்பது) அருகன் - குருவுக்கும்பெயரொன்றவாறு. (௩௬)

குத்திமண்ணடக்கமென்பகோணம்வாள்குதிரைமூக்காம் .. *
பத்தியேமுறையொழுக்கம்புகர்வழிபாடுமுப்பே ... ... *

குத்திரியார்கலியேயானையதவெனும்பாகநாற்பேர் ... ... *
சத்தியஞ்சபதமெய்யாந்தபுதலேசாவுங்கேடும் ... ... *

(இதன்பொருள்.)

(குத்தியென்பது) பூமி- அடக்கத்துக்கும்பெயர். (கோணமென்பது)வாளாயுதம்-குதிரை-மூக்குக்கும்பெயர்.(பத்தியென்பது) முறைமை- தன்னிலை - வழிபடுதலுக்கும்பெயர். (அத்தியென்பது) சமுத்திரம்- யானை- அத்திமரம் - எலும்புக்கும்பெயர். (சத்தியமென்பது சபதம் - உண்மைக்கும்பெயர். (தபுதலென்பது) சாதல்- கெடுதலுக்கும்பெயரொன்றவாறு (௱௭)

பித்திகைகருமுகைக்குப்பெயர்சுவர்த்தலமுமாகும் ... ... *
கத்திகைதொடைவிகற்பந்துவசமேகமழ்வாசந்தி ... ... *
உத்திசெந்திருவுறுப்புச்சுணங்குரையாடன்முப்பேர் ... *
தூத்தியேசுணங்குபாம்பின்சுடர்ப்பொறிபுதலொன்றமே *

(இதன்பொருள்.)

(பித்திகையென்பது) சிறுசண்பகம் - சுவர்த்தலத்துக்கும்பெயர். (கத்திகையென்பது) மாலையின்வேறுபாடு- துகிற்கொடி-குருக்கத்திகொடிக்கும்பெயர். (உத்தியென்பது) திருவுறுப்பெனுந் தலைக்கோலம்- தேமல்-உரைத்தலுக்கும்பெயர். (தூத்தியென்பது) தேமல-பாம்பின்படப்பொறி- ஓர்செடிக்கும்பெயரொன்றவாறு()

சித்திரபானுசெந்தீதிவாகரனுண்டொன்றின்பேர், ... *
பத்திரமிலைவனப்புப்படைநன்மைசிறகேபாணம் ... ... *
சித்திரமழகோர்பாடல்சிறந்தவிம்மிதமேரண்டும் ... ... *
சத்திரங்குடைமேயன்னசாலைகைவிடாவேல்வேள்வி ... *

(இதன்பொருள்)

(சித்திரபானுவென்பது) நெருப்பு- சூரியன்- ஓர்வருடத்துக்கும்பெயர். (பத்திரமென்பது) இலை- அழகு- ஆயுதம் - நன்மை- பறவையினிறகு- அம்புக்கும்பெயர். (சித்திரமென்பது) அழகு- ஓர்கவி- அதிசயம்- ஆமணக்குக்கும்பெயர். (சத்திரமென்பது) குடை- அன்னசத்திரம்- கைவிடாவேல -யாகத்துக்குப்பெயர்-எ-று

காத்திரங்கனமெய்சீற்றங்களிற்றின்முறகாலகிரி... ... ...*
நேத்திரங்கண்பட்டாடைநீலியேகருமைதுர்க்கை... ......*
கோத்திரம்புடவிதானேகுலமொடுமலையுமாமே...........*
பாத்தியேசிறுசெய்யில்லம்பகுத்தலும்வகுத்தநாமம்......*

(இதன்பொருள்.)

(காத்திரமென்பது) கனம் உடல்-கோபம்-யானைமுன்கால்-கிரிக்கும்பெயர். (நேத்திரமென்பது) கண்-படவெஸ்திரத்துக்கும்பெயர். (நீலியென்பது) கறுப்பு-துர்க்கைக்கும்பெயர். (கோத்திரமென்பது) பூமி-குலம்-மலைகளுக்கும்பெயர். (பாத்திரியென்பது) சிறுவயல-வீடு-பாகுபாட்டுக்கும்பெயரொன்றவாறு. (௱௰)

சதமிலையிறகோரொண்ணுஞ்சத்தமேயோசையேழாங் ... *
கதவமேகதவுகாப்பாங்கழங்குபேய்நடங்கழற்சி .. ... *
பதமுரைவின்பஞ்செவ்விபதவிதாள்வரிசைவார்த்தை... ...*
மதிமுன்னிலையசைச்சொன்மாதமம்புலிபுத்திப்பேர் ..*

(இதன்பொருள்.)

(சதமென்பது) இலை - இறகு - ஒரொண்ணுக்கும்பெயர். (சத்தமென்பது) ஒலி - ஏழுக்கும்பெயர். (கதவமென்பது) கதவு- காவலுக்கும்பெயர். (கழங்கென்பது) பேய்க்கூத்து - கழற்காய்க்கும்பெயர். (பதமென்பது) சோறு- இன்பம்- காலம்- வழி - பாதம்- வரிசை - சொல்லுக்கும்பெயர். (மதியென்பது) முன்னிலையசைச்சொல்- மாதம்- சந்திரன்- புத்திக்கும்பெயரொன்றவாறு. (௱௰௧)

பீதகஞ்சாந்துபொன்மைபெருந்தனமிருவேலிப்பேர் ...*
சாதகம்வானம்பாடிசனனம்பாரிடமும்பேரே ... ... *
சேதகஞ்சேறுசெம்மைதேயந்தானுடம்புநாடா ... ... *
மாதமோவிடைச்சொல்காதல்வனப்பொடுகளிராமே ... *

(இதன்பொருள்.)

(பீதகமென்பது) நாலவகைச்சாந்திலொன்று - பொன்னிறம்- செம்பொன்- வெட்டிவேருக்கும்பெயர். (சாதகமென்பது) வானம்பாடி- பிறப்பு- பூதத்துக்கும்பெயர் (சேதகமென்பது) சேறு- சிவப்புக்கும்பெயர். (தேயமென்பது) சரீரம்- நாட்டுக்கும்பெயர் (மாதமென்பது) இடைச்சொல்- ஆசை- அழகு-பெண்களுக்கும் பெயரொன்றவாறு. (௱௰௨)

சோதிமாலருக்கன்பானுசுடர்விளக்கிசனோர்நாள்... ... ...*
பூதியேநரகஞ்செலவந்துர்க்கந்தம்புழுதிநீறும் ... ... *
வீதியேதெருநேரோடன்மேலென்பதிடம்விண்மேற்கா .. *
மாதிரந்திசையாகாயமலையானைநிலமைம்பேரே ... ... *

(இதன்பொருள்.)

(சோதியென்பது) திருமால- அருகன்-சூரியன்- ஒளி-தீபம் சிவன் ஓர்நக்ஷத்திரத்துக்கும்பெயர். (பூதியென்பது) நரகம் - செல்வம்- நாற்றம்- புழுதி - விபூதிக்கும்பெயர். (வீதியென்பது) தெரு மிறங்கடலுக்கும்பெயர். (மேலென்பது) இடம்- ஆகாயம் மேற்குக்கும்பெயர். (மாதிரமென்பது) திக்கு - ஆகாயம் - மலை- யானை- பூமிக்கும்பெயரென்றவாறு. (௱௰௫)

தாதுபொன்முதலாமேழுஞ்சடமுறுதாதோரேழும் ... *
பூதமோரைந்துங்காவிகங்கலுடன்புகலுநாற்பேர். ... ... *
வேதிகைபலகைதிண்ணைவெதிரொன்பசெவிடுவேணு ... *
கேதுமேசிகிபதாகைகிளைதான்குறிஞாதத்தை ... ... *

(இதன்பொருள்.)

(தாதென்பது) பொன்முதலியவெழுவகைலோகம் - உடலிற்றோன்றி இரதமுதலிய வெழுவகைத்தாது - மண்முதலியவைவகை பூதம்-காவிக்கலலுக்கும்பெயர் (வேதிகையென்பது) கேடகம் திண்ணைக்கும்பெயர். (வெதிரொன்பது) செவிடு - மூங்கிலுக்கும்பெயர், (கேதுவென்பது) ஓர்கோள்- துகிற்கொடிக்கும்பெயர் (கிளையென்பது) குறிஞா- கிளிக்கும்பெயரென்றவாறு. (௱௰௬)

கதுப்பேயானைமயிரும்பெண்பான்மயிரொடுகவுளுமுப்பே
விதப்பேகம்பிதமிகைக்குப் விதத்தம்பொன்பழிப்புஞான....[ர்
மதிர்ப்பொலிநடுக்கமெனபவகப்பாமேவுபுரிசைமேடை ..[ம்
யொதுக்கம்நடைமறைப்பாமொருத்தலாண்விலங்குவேழ

(இதன்பொருள்.)

(கதுப்பென்பது) மைந்தாமயிர் - பெண்மயிர். கபோலத்துக்கும்பெயர். (விதப்பென்பது) நடுக்கம் - மிகுதிக்கும்பெயர். (விதத்தமென்பது) பொன் - இகழ்வு - ஞானத்துக்கும்பெயர். (அதிர்ப்பென்பது) சத்தம்- நடுக்கத்துக்கும்பெயர். (அகப்பாவென்பது) மதில் - மதிலுண்மேடைக்கும்பெயர். (ஒதுக்கமென்பது) நடை- மறைப்புக்கும்பெயர். (ஒருத்தலென்பது) ஆண்மிருகம்- யானைக்கும்பெயரென்றவாறு. (௱௰௭)

பத்திரிபறவைகாளிபரியிலைபாணமைம்பே ... ... *
சத்திரிகழுதைவிண்ணொட்டகம்பரியசலமம்பாஞ் ... ...*

சத்திரியேபுமைவேல்கான்றல்குடைவலிதுவசந்தானுஞ் ... *
சுத்திரியேயகல்வெண்சங்கஞ்சுத்தமோர்கருவிக்கும்பேர் ... *

(இதன்பொருள்.)

(பத்திரியென்பது) பட்சி- காளி - குதிரை- இலை - அம்புக்குஞ் பெயர். (அத்திரியென்பது) கழுதை-ஆகாயம்-ஒட்டகம்- குதிரை- மலை-பாணத்துக்கும்பெயர். (சத்திரியென்பது) பார்வதி-வேலாயுத ம்-கக்கல்-குடை-வலிமை-துகிற்கொடிக்கும்பெயர். (சுத்திரியென்ப து) அகல்-சங்கு-சுசி ஓர்கருவிக்கும்பெயரொன்றவாறு. (ராயசு)

புத்தன்மாலருகன்சாந்தன்பூழிருணவில்பூமிப்பேர் ... ... *
புத்தேளேபுதுமைதேவாம்பூட்கைதோன்மேற்கோள்யாளி*
தைத்தறுன்னங்கைத்தற்பேர்சாறுகள்விழாவுதாரு ... ... *
முத்தமேபிரியமோட்டமருதநன்னிலமுத்தாம்ம ... ... *

(இதன்பொருள்.)

(புத்தனென்பது) திருமால் - அருகன் - புத்தனுக்கும்பெயர். (பூழியென்பது) அகில் - பூமிக்கும்பெயர். (புத்தேளென்பது பு துமை- தெய்வத்துக்கும்பெயர். (பூட்கையென்பது) யானை - மே ன்மை- யாளிக்கும்பெயர். (தைத்தலென்பது) துணிமுதலியதைத் தல்- அலங்கரித்தற்கும்பெயர். (சாறென்பது) கள்- திருவிழா - ம ரக்குலைக்கும்பெயர். (முத்தமென்பது) பிரீதி- உதடு -மருதநிலம்- முத்துக்கும்பெயரொன்றவாறு. (ராயன)

அத்தனேமூத்தோன்றந்தையரனொடுகுருவுநாற்பேர் ... *
சித்தமேதிடமுள்ளப்பேர்சேகரந்தலைமாவேராங் ... ... *
கைத்தலேசினங்கைப்பாகுங்கஞறமேலபொலிவுகன்றல் ... *
சித்தென்பசயமேஞானஞ்செய்யென்பநிலமேவற்பேர் ...*

(இதன்பொருள்)

(அத்தனென்பது) மூத்தோன்-பிதா-சிவன்- குருவுக்கும்பெயர். (சித்தமென்பது) மெய்-மனத்துக்கும்பெயர். (சேகரமென்பது) தலை-மாமரம்-அழகுக்கும்பெயர். (கைத்தலென்பது) கோபம் - கச ப்புக்கும்பெயர் (கஞறலென்பது) மங்கலம் சினக்குறிப்புக்கும்பெ யர் (சித்தென்பது) வெற்றி-ஞானத்துக்கும்பெயர். (செய்யென்ப து) விளைநிலம்- செய்யனேவற்குப்பெயரொன்றவாறு. (ராயஅ)

உத்திரஞ்சித்திரஞ்சேர்ந்தொளிருமிலைவுறுப்போடோர்நாள்
பைத்தமேலெழுமினிவிரேருபசுத்தலும்பகரலாகு ... ... *
மத்திகைமேயசம்மட்டிசுடர்நிலைத்தண்டுமாலை .. .. *
மத்தென்பதயிராமதமோடுமத்தமுமிருபேராமே ... ... *

(இதன்பொருள்.)

(உத்திரமென்பது) இலையுறுப்பாகியவுத்திரம் - ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர் (பைத்தமென்பது) கோபம் - பசுமைக்கும்பெயர். (மத்திகையென்பது) குதிரைச்சம்மட்டி - விளக்குத்தண்டு - பூமாலைக்கும்பெயர். (மத்தென்பது) தயிர்முதலிய கடையுமத்து - ஊமத்தைக்கும்பெயரொன்றவாறு. (௱௰௧)

மதர்வுமேவுசெவ்வனப்புவலியிடமிகுதியும்பேர் ... ... *
புதவென்பகதவோர்புல்லாம்புணர்ச்சியேகலவிகூடல ... *
சிதறுறிதுளிவல்லவண்டுசீலையின்றுணிநாற்பேரே ... ... *
அதர்வழிபுழுதியாட்டினதருநுண்மணலுமாமே ... ... *

(இதன்பொருள்.)

(மதர்வென்பது) ஆசைப்பெருக்கம் - அழகு - வலிமை - இடம் - மிகுதிக்கும்பெயர் - (புதவென்பது) கதவு - ஓர்வகைப்புல்லுக்கும் பெயர் - (புணர்ச்சியென்பது) சையோகம் - இசைப்புக்கும்பெயர் (சிதரென்பது) உறி - துளி - வண்டு சீலைத்துணிக்கும்பெயர் (அதரென்பது) வழி - புழுதி - ஆட்டினதர் - நுண்மணலுக்கும்பெயர் - எ - று.

முதலைசெங்கிடையிடங்காமுருந்தெனமொழியலாகும் ... *
அதமிறங்குதலபாதாளங்கீழுமென்றறையுமுப்பேர் ... ... *
கதிநடைவிரைவேநான்குகதியொடுகதியுங்காட்டும் ... ... *
மதமிடமதஞ்செருக்காமாயையேமாயஞ்சத்தி ... ... *

(இதன்பொருள்.)

(முதலையென்பது) செஞ்சடை - நீர்வாழ்முதலை - இறகினடிக்குருத்துக்கும்பெயர். (அதமென்பது) இறங்குதல் - பாதலம் - கீழுக்கும்பெயர். (கதியென்பது நடையின்வேகம் - தேவகதிமுதலிய நாற்கதி - முத்திக்கும்பெயர். (மதமென்பது) யானைமதம் - களிப்புக்கும்பெயர். (மாயையென்பது) வஞ்சனை - சத்திக்கும்பெயர் - எ - று

பீதமேசாந்துமஞ்சள்பிங்கலந்தொடுபொன்மைப்பேர் ... *
பேதையோர்பருவமூடன்பெண்டரித்திரனேநாற்பேர் ... *

[illegible] காவப் பரிமாவடிப்போர் ... ... *
[illegible] டிம்பரிமுடிசணன்பெருமாமே ... . *

([illegible] பொருள்.)

([illegible] னென்பது) [illegible] சாதியிலொன்று- மஞ்சரீ பொ[illegible] [illegible] [illegible] (பெருமையென்பது) [illegible] [illegible] - ரிசிரணுகரும் [illegible] [illegible] [illegible] கருகரும்பெட [illegible] [illegible] [illegible] [illegible] ஸஹஸ்ரகிரம் சிவனுக்கும் பெயரென்றவாறு. ()

[illegible] டைமையுமிருபேர் [illegible] ... ... *
[illegible] பூவார்மேபாரவைம்தா [illegible] .*
[illegible] தலைகளமேடேரியப [illegible] .. ..*
[illegible] வெயிலம்பிவிளம்புமபம்போ ... ... *

([illegible] பொருள்)

(ஞாதிமெனபது) [illegible] சதுரம் - அடிமை [illegible] பெயர். (போமெனபது) [illegible] - மருதகரும்பெயர். ([illegible] ன்பது) தோ[illegible] [illegible] பெயர் (சாத மென்பது) உ[illegible] [illegible] பெயர். [illegible] யென்பது) அழகு- குணம் - பெருமைகளுக் பெயர். (வீதமென்பது) [illegible] ல- சாதல- வறுமைக [illegible] பெயரென்றவாறு. (ஈஉரு)

ஞகரவெதுகை முற்றிற்று.

நகரவெதுகை.

இந்தனமிசையேகாட்ட [illegible] னவுமாகும் ..., ... *
சந்தமெதிறம்வனப [illegible] ... ... *
கந்தம் [illegible] ... ... *
மந்திரமவிசார [illegible] யின்குழாய [illegible] ... ...*

(இதன் பொருள்)

(இந்தனமெனபது) [illegible] - விறகு- அக்கினிசுவாலைக்கும் பெ யா. சந்தமெனபது நிறம் - அழகு - கவிதை - ச[illegible] கும் பெயர். (கந்தமென்பது) [illegible] - கழுத்தடி - கிழங்கு- வாசனைகளுக்கும் பெயர். மந்திர [illegible] யனபது) ஆலோசனை தேவா [illegible] குதிரைக்கூடம் [illegible] பெயரென்றவாறு. ()

அந்தி [illegible] களையயிரட் பேரணைவிலையரண புரம் ... ... *
சந்தியேயந்தி [illegible] மங்கிலசக்ராகர புகல் [illegible] ... ... *
நந்தியேசிவ [illegible] மேமறைநந்தி [illegible] ... ... *
உந்திகேதருருமியாறே புவி நாசகுழி [illegible] ... ... *
(இ-ள் பொருள்.)

(அந்தியென்பது) ஆம்பிகன்படு) [illegible] சந்தி [illegible] பெயர். (அணவென்பது) [illegible] பெயர். (சந்தியென்பது) மாலைகாலம்- மூர [illegible] பெயர். (நந்தியென்பது) சிவன்-இடப- [illegible] பெயர். (உந்தியென்பது) தேருருளை - நதி-கடல்- [illegible] குழி- [illegible] பெயரொன்றவாறு. (௱உ௫)

கா [illegible] புளிந்த [illegible] கம்பமும் யாக்கையுமுடநிர ... ... *
[illegible] தாநகமென்பது [illegible] பேர் ... *
பந் [illegible] புமட [illegible] நீர் [illegible] யும்பேர் .. *
[illegible] கொந்து [illegible] முப்பேர். ... ... *
(இ-ள் பொருள்.)

(கந்தென்பது) இருசு- தூண்- யாக்கையின் மூட்டுக்கும்பெயர். (சந்தென்பது) [illegible] பெயர். (கமென்பது) [illegible] பெயர். (பந்தென்பது) [illegible] பெயர். (கொந்தளமென்பது) பெண்மயிர்- மயிர் [illegible] கொத்து [illegible] பெயரொன்றவாறு. (௱உ௬)

வேந்[illegible] சன் [illegible] பமிந்திர [illegible] தன் ... ... *
கா [illegible] டென்பது [illegible] கருமை [illegible] ... ... *
[illegible] பெருமை [illegible] கொடு வேல்கூர்மை *
கூந்தல் பெண்மயிர் [illegible] குவலப்பருவளை பூமி ... *
(இ-ள் பொருள்.)

(வேந்தனென்பது) இராசன்- சந்திரன்- குரு - தேவேந்திரன்- சூரியன் [illegible] பெயர். (காந்தாரமென்பது [illegible] - காட்டுக்கும்பெயர். (கூபகமென்பது) கறுப்பு [illegible] கும்பெயர். (எந்தலென்பது) பெருமை- மேட்டிற்கும்பெயர். (எஃகென்பது) உருக்கு- வேலாயுதம்- கூர்மைக்கும்பெயர். (கூந்தலென்பது) மாதர்மயிர்- மயிர்த்தோகைக்கும்பெயர். (குவலயமென்பது) குவளைப்போது- பூமிக்கும்பெயரொன்றவாறு. (௱உ௭)

அந்தரமுடிவுவெறுபாழ்மேடுடனாற்பேரே ... ... *
கந்தரமென்பமேகங்கழுத்தொடுமலைமுழைப்பேர் .. ... *
மந்தாரந்தருவரஞ்செவ்வரத்தமுமாமென்ப ... ... *
சிந்துரம்புளிமாயானைசெங்குடைதிலகஞ்செம்மை ... *

(இதன்பொருள்.)

(அந்தரமென்பது) முடிவு - வெறுபாழ் - ஆகாயம் - இந்நான்குக்கும்பெயர். (கந்தரமென்பது) மேகம் - கழுத்து - மலைமுழைக்கும்பெயர். (மந்தாரமென்பது) ஐந்தருவிலொன்று - செவ்வரத்தத்துக்கும் பெயர். (சிந்துரமென்பது) புளிமா - யானை - சிவப்புக்குடை - பொட்டு - சிவப்புக்கும்பெயரொன்றவாறு. (௱௨௮)

கந்தருவம்பண்வாசிகவந்தமென்பதுநீர்மட்டை ... ... *
குந்தமேபொருவியாதிகுருந்தொடுகுதிரைவேல் ... ... *
செந்துவோர்நரகமோரிசைவெழுவுநாற்பேர ... ... *
சிந்துநீர்முச்சீராறுகடல்குறளொருதேசப்பேர் ... ... *

(இதன்பொருள்.)

(கந்தருவமென்பது) இசைப்பாட்டு - குதிரைக்கும்பெயர். (கவந்தமென்பது) நீர் - உடற்குறைக்கும்பெயர். (குந்தமென்பது) ஓர்நோய் - குருந்தமரம் - குதிரை - கைவேலுக்கும்பெயர். (செந்தென்பது) ஓர்நரகம் - கிழநரி - உயிர் - அறுவுக்கும்பெயர். (சிந்தென்பது) நீர் - முச்சீர் - நதி - கடல் - குறளடி - ஓர்தேசத்துக்கும் பெயரொன்றவாறு. (௱௨௯)

அந்திமுச்சந்திபாலையாழிசையிரவுமாலை ... ... *
நந்தென்பநத்தைசங்குநாறுதன்மணமுண்டாதல் ... ... *
மைந்தனேதிறலோன்சேயாம்வசந்தமேயிளவேனில்வாசம் ... *
வந்தியர்புகழ்வோர்பேருமலடிகள்பேருமாமே ... ... *

(இதன்பொருள்.)

(அந்தியென்பது) முத்தெருக்கூடுமிடம் - பாலையாழிசை - இராத்திரி - மாலைக்காலத்துக்கும்பெயர். (நந்தென்பது) நத்தை - சங்குக்கும்பெயர். (நாறுதலென்பது) மணத்தல் - உண்டாதலுக்கும் பெயர். (மைந்தனென்பது) திண்ணியன் - மகனுக்கும்பெயர். (வசந்தமென்பது) வசந்தகாலம் - வாசனைக்கும்பெயர். (வந்தியென்பது) புகழ்வோர்மலடிகட்கும்பெயரொன்றவாறு. (௱௩௰)

விந்தமோரெண்ணும்வெற்பம்விருத்தமேவட்டமூப்பாம் ... *
மந்தணமறைவோராய்ப்பாரணிபடையருப்பணியும் .. *
அந்தகனுருத்திரன்கூற்றுமங்காரகன்றீசெவ்வாய் ... *
மந்தனேசனிகூர்ப்பிலாமனுடனுமிருபேராமே ..... *

(இதன்பொருள்.)

(விந்தமென்பது) ஓரெண் - மலைக்கும்பெயர். (விருத்தமென்பது) வட்டவடிவு - மூப்புக்கும்பெயர். (ஆரணமென்பது) முனிவர் - பார்ப்பாருக்கும்பெயர். (அணியென்பது) படைவகுப்பு - ஆபரணத்துக்கும்பெயர். (அந்தகனென்பது) உருத்திரன் - இயமனுக்கும்பெயர். (அங்காரகனென்பது) நெருப்பு - செவ்வாய்க்கும்பெயர். (மந்தனென்பது) சனி - கூர்மையில்லானுக்கும்பெயர் - எ - று.

நகரவெதுகை - முற்றிற்று.

பகரவெதுகை.

உப்புமெல்லியலாராடலுவர்கடலினிமைநாற்பேர் ... ... *
செப்பமேநடுநிலைப்போதொருமையொடுநெஞ்சுமாகுந் ... *
துப்பரக்கறிவார்தூய்மைதுகிர்பகையனுபவப்பேர் ... *
கப்பணமிரும்பிற்செய்தநெருஞ்சின்முட்கைவேலாமே. *

(இதன்பொருள்.)

(உப்பென்பது) மகளிர்விளையாட்டு - உவர்த்தல் - கடல் - இனிப்புக்கும்பெயர். (செப்பமென்பது) நடுநிலை - வீடு - மார்புக்கும்பெயர். (துப்பென்பது) அரக்கு - அறிவு - சுத்தம் - பவளம் - பகை - அனுபோகத்துக்கும்பெயர். (கப்பணமென்பது) இரும்பினிற்செய்த நெருஞ்சின்முள் - கைவேலுக்கும்பெயரென்றவாறு. (௱௯௨)

தாபரமலைபோனிற்றலுடலொடுதருவுமூற்பேர் ... ... *
நீபமுத்திரட்டாதியும்பேர்நிமித்தநீர்கடம்புமாகும் ... ...*
யூபமேயாகசம்மேவல்விகுறுதம்பம்படைவகுப்பாஞ் ...*
சாபமேசபித்தல்வில்லாந்தனியமேயழுந்தியபைதை ... *

(இதன்பொருள்.)

(தாபரமென்பது) மலை - போனிற்றல் - உடல் - மரப்பொதுவிற்கும்பெயர். (நீபமென்பது) உத்திரட்டாதி - நக்ஷத்திரம் - கரணம் - நீர்கடம்புக்கும்பெயர் (யூபமென்பது) உடற்குறை - யாகஸ்தம்ப

வைக்கட்டுந்தறி-படைவகுப்புக்கும்பெயர். (சாபமென்பது) சபி த்தல்- வில்லுக்கும்பெயர் - (தளிமமென்பது) அழகு - மெத்தை க்கும்பெயரொன்றவாறு. (௱௩௩)

சீப்பென்பகதவிற்றுழுஞ்சீவுகங்கழுமாமென்ப ... ... *
நாப்பணென்பதுமேதர்த்தட்டுநடுவும்யாழுறுப்பழுப்பேர் *
காப்பென்பகாவல்லாடுகதவும்வெண்ணீறுமாகும் ... .. *
யாப்பென்பகவிதைகட்டாமிறுதேன்கூடெருதுமீன ... *

(இதன்பொருள்.)

(சீப்பென்பது) தாழகக்கோல்- சீப்புக்கும்பெயர். (நாப்பணென்பது) மேதர்த்தட்டு - நடு-யாழினுறுப்புக்கும்பெயர். (காப்பென்பது) காவல்- கதவு - வெண்ணீற்றுக்கும்பெயர். (யாப்பென்பது) பாட்டு- கட்டுக்கும்பெயர். (இறுலென்பது) தேன்கூடு- எருது- ஓர்மீனுக்கும்பெயரொன்றவாறு. (௱௩௪)

பகரவெதுகை முற்றிற்று.

மகரவெதுகை.

சமன்யமனடுவுமாகுஞ்சலமெனபவயிரநீர்பெர்ய் ... ... *
கமலநீர்வனசமும்பேர்கலாஞ்சினங்கொடுமையாகும் ... *
குமரிகற்றாழைகன்னிகொற்றவைகாளிக்குப்பேர் ... ... *
ஞமலிநாய்மயிலகள்ளென்ப நனைகள்ளுமலர்மொட்டும்பேர்

(இதன்பொருள்.)

(சமனென்பது) இயமன்- நடுவுக்கும்பெயர். (சலமென்பது) தணியாக்கோபம் நீர்- அழுத்தத்துக்கும்பெயர். (கமலமென்பது) சலம்- தாமரைக்கும்பெயர். (கலாமென்பது) கோபம்- குரூரத்துக்கும்பெயர். (குமரியென்பது) கற்றாழை - கன்னி - துர்க்கை- காளிக்கும்பெயர். (ஞமலியென்பது) நாய் - மயில் - கள்ளுக்கும்பெயர். (நனையென்பது) கள்- பூவரும்புக்கும்பெயரொன்றவாறு. ()

சாமமோர்வேதம்பச்சைசாமம்மகருமைநாற்பேர் ... ... *
வாமமேகுறளிடப்பால்வனப்பொடுதொடையுமாமே ... *
பூமலர்வனப்புக்கூர்மைபொலிவொடுபிரப்புப்பூமி ... *
யேமமேசேமங்காவலின்பம்பொன்னிரவுமையல் ... *

(இதன்பொருள்.)

(சாமமென்பது) ஓர்வேதம்- பச்சை- இரவு - கறுப்புக்கும்பெயர்- (வாமமென்பது) குறள்- இடதுபக்கம்- அழகு- தொடைக்கும்பெயர். (பூவென்பது) மலர்- அழகு- கூர்மை- பொலிவு பிறப்பு - பூமிக்கும்பெயர். (ஏமமென்பது) புதையல்- காவல- சுகம்- பொன் இராத்திரி-மயக்கத்துக்கும்பெயரொன்றவாறு. (௱௯௬)

உம்பரோதேவராகுமுயர்நிலமுடன்மேலும்பேர் ... ... *
வம்பென்பபுதுமைகச்சுமணநிலையின்மைநாற்பேர் ... *
கும்பமேகுடமிராசிகும்பிமத்தகமுமாகும் ... ... *
தும்பென்பசிம்புட்டோடாஞ்சுகமென்பகிளியேயின்பம்...*

(இதன்பொருள்.)

(உம்பரென்பது) தேவர்- தேவலோகம்- மேலுக்கும்பெயர். (வம்பென்பது புதுமை முலைக்கச்சு - வாசனை- நிலையிலாமைக்கும்பெயர். (கும்பமென்பது) குடம்- ஓரிராசி யானைமத்தகத்துக்கும்பெயர். (தும்பென்பது) சிம்புள் - ஓர்கயிற்றுக்கும்பெயர். (சுகமென்பது) கிளி-இன்பத்துக்கும்பெயரொன்றவாறு. (௱௯௭)

ஆம்பலவேய்கள்ளுக்கவ்வையல்லிவங்கியமேயானை ... ... *
சாம்பல்கூப்புதல்பழம்பூத்தயிமென்பதிண்ணமதீமை ... *
தாம்பென்பகயிறுதவோதாமணிதனக்கும்பேராம் ... *
காம்புவேய்மலர்த்தாள்பட்டேகடிமலர்க்கொம்பேநாற்பேர்

(இதன்பொருள்.)

(ஆம்பலென்பது) மூங்கில- கள்- துன்பம்- அல்லி வேய்ங்குழல் - யானைக்கும்பெயர். (சாம்பலென்பது குவிதல- பழம்பூவுக்கும்பெயர். (தீமையென்பது தீதிப்பு- நெருப்புக்கும்பெயர் (தாம்பென்பது கயிறு தாமணிக்கும்பெயர் (காம்பென்பது) மூங்கில்-பூவின்காம்பு-பட்டுச்சீலை- மரக்கொம்புக்கும்பெயரொன்றவாறு.

அம்மையேவருபிறப்புமழகுமாந்தாயுமாகும் ... [லுஞ்
சும்மையென்பதுவே நெற்போர்நற்பொலிசுமையுஞ்சொல்
செம்மைசெவ்வையுஞ்சிவப்புந்திரிதலேபுலாவல்கேடாந்[டல்
கொம்மையேயிளமைவட்டங் கொங்கைகைகுவித்துக்கொட்

(இதன்பொருள்.)

(அம்மையென்பது) வருபிறப்பு- அழகு- தாய்க்கும்பெயர்.

(சும்மையென்பது) நெற்போர்-நாடு- சத்தம் சுமைக்கும்பெயர்.
(செம்மையென்பது)செவ்வை சிவப்புக்கும்பெயர்.(திரிதலென்ப
து,உலாவல்-கெட்டுக்கும்பெயர்.(கொம்மையென்பது)இளமை-வ
ட்டவடிவு-முலை-கைகுவித்துக் கொட்டலுக்கும்பெயரொன்றவாறு.

அம்மழகசைச்சொனீராமழனந்தீப்பிணையுமாகுங் ..... *
கம்மென்பதலையாகாயங்கனங்காணீர்விதிவெறுப்புச் ......*
செம்மலேபழம்பூவீசன்சினேந்திரன் சிறந்தோன்மைந்தன்
கம்மியர்கைவினைப்பேர் கண்ணாளர்தாமுமாமே ... ... *

(இதன்பொருள்.)

(அம்மென்பது) அழகு- அசைச்சொல்- நீருக்கும்பெயர். (அ
ழனமென்பது) நெருப்பு - பிரேதத்துக்கும்பெயர். (கம்மென்ப
து) தலை- ஆகாயம்- மேகம்- காற்று- நீர்-பிரமன்- வெண்மைக்கும்
பெயர். (செம்மலென்பது) பழம்பூ- சிவன்- அருகதேவன்- சிறப்
புற்றோன்- மகனுக்கும்பெயர். (கம்மியமென்பது) தொழில்செய்
வோர்- கம்மாளருக்கும்பெயரொன்றவாறு. (௱௪௰)

வாமனங்குறள்புராணமாதிரக்கயத்திலொன்றாங் ... ... *
காமரமத்தநாளோடடுப்பிசைப்பொதுவுங்காட்டு ... ... *
நேமிசக்கரம்பார்வட்டநேமிப்புட்கடலும்பேமா ... ... *
தேமென்பதிடந்தித்திப்புத்தேனூற்றந்திசைந்தேசப்பேர் ..*

(இதன்பொருள்)

(வாமனமென்பது) குள்ளம்- ஓர்புராணம்- தென்றிசையானைக்
கும்பெயர். காமரமென்பது) அத்தநட்சத்திரம்-அடுப்பு- இசை
ப்பொதுவிற்கும்பெயர். (நேமியென்பது) சக்கராயுதம்- பூமி-வ
ட்டவடிவு- சக்கரவாகப்புள்- சமுத்திரத்துக்கும்பெயர்.(தேமென்
பது) இடம்- தித்திப்பு - தேன்- வாசனை - திக்கு - தேசத்துக்கும்
பெயரொன்றவாறு. (௱௪௧)

தாமம்வெற்பொழுங்குகொன்றை சாந்தொளிநகரந்தாம்பு,*
பூமணிக்கோவைமாலைபொருகளங்கரியீராறுஞ் ... ... *
சோமமேநீர்வள்ளிந்துச்சுருப்பென்பமலையும்வண்டுஞ் ..*
சாமியேமுதலவன்செவ்வேடலைவியாகன்வெறுக்கை ... *

(இதன்பொருள்.)

(தாமமென்பது) மலை- ஒழுங்கு- கொன்றைமரம்- சாந்து- பிர
காசம்- பட்டணம் கயிறு-பூ மணிக்கோவை-பூமாலை போர்க்களம்-

யானைக்கும்பெயர். (சோமனென்பது) ஓர்வள்ளல்- சந்திரனுக்கும் பெயர். (சுரும்பென்பது) மலை- வண்டிக்கும்பெயர். (சாமியென்பது) கடவுள்-முருகக்கடவுள்-முதல்வி- குரு- பொன்னுக்கும்பெயரொன்றவாறு. (ரசஉ)

குமுதமேயடுப்போர்திக்கின்குஞ்சரமொலிவெண்மையுந்தல் *
சிமயமேமலைவெற்புச்சிகரத்தீயேநரகுதீங்கா ... ... *
மமறலேல்பொலிவுநன்னலரிறாறுபிணக்கமாசு ... ... *
சிமிலியேகுடுமிசிக்கஞ்சிள்வீடுதானுமாமே ... ... *

(இதன்பொருள்.)

(குமுதமென்பது) அடுப்பு- மேற்றிசையானை - சத்தம்- வெள்ளாம்பலுக்கும்பெயர். (சிமயமென்பது) மலை -மலையினுச்சிக்கும் பெயர். (தீயென்பது) நெருப்பு- நரகம் - தீமைக்கும்பெயர். (அமரலென்பது) பொலிவு - நெருங்கலுக்கும்பெயர். (அரிலென்பது) சிறுதூறு- பிணக்கு - குற்றத்துக்கும்பெயர். (சிமிலியென்பது) சிகை- உறி- சிள்வண்டுக்கும்பெயரொன்றவாறு. (ரசங)

சம்புவேயிரவிநாவல்சங்கரனயன்மாலோரி ... ... *
தும்பியேகளிறுவண்டாநந்துன்னலேசெறிதல்சேர்தல் ... *
கம்புளேசங்குசம்பங்கோழியென்றிருபேர்காட்டு ... ... *
மம்பரங்கடல்விண்சீராமண்ணலேதலைவன்பீடு ... ... *

(இதன்பொருள்.)

(சம்புவென்பது) சூரியன்- நாவன்மரம்- சிவன்- பிரமன் - திருமால்- நரிக்கும்பெயர். (தும்பியென்பது) யானை- வண்டுக்கும்பெயர். (துன்னலென்பது) நெருங்கல் - கிட்டலுக்கும்பெயர். (கம்புளென்பது) சங்கு-சம்பங்கோழிக்கும்பெயர். (அம்பரமென்பது) கடல் - ஆகாயம் - வஸ்திரத்துக்கும்பெயர். (அண்ணலென்பது) அரசன்- பெருமைக்கும்பெயரொன்றவாறு. (ரசச)

கிம்புரிமுடிதந்தப்பூண்கேட்டைதான்முகடியோர்நாள் ... *
தும்பிசேறுனைபூதிகுலைதான்செய்கனைகாய்க்கொத்தா ... *
மும்பலாண்விலங்குவேழமுயர்குலமெழுச்சிக்கும்பே ... *
ரம்பலேபழிச்சொல்சில்லோரதிந்தலர்தூற்றலாமே ... *

(இதன்பொருள்.)

(கிம்புரியென்பது) முடி- யானைக்கொம்பிற்பூணுக்கும்பெயர். (கேட்டையென்பது) மூதேவி - ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர்.

(தும்பியென்பது) சேறு யானை-நரகத்துக்கும்பெயர். (குலையென்பது) செட்கனா-மரக்குலைக்கும்பெயர். (உம்பலென்பது) ஆண்மிருகம்- யானை - குலம் எழுச்சிக்கும்பெயர். (அம்பலென்பது) பழிச்சொல்- சிலரறிந்துதட்டுப்புறங்கூறலுக்கும்பெயரொன்றவாறு.)

கம்பலையச்சமேயாஞ்சம்பிதந்துன்பநாற்போ ... ... *
செப்புலம்பாலைச்செருந்திணைசெருக்களமிரண்டாம் ... ... *
தம்பம்மேகவசந்தூணுஞ்சமழ்த்தல்வருத்தநாணம் ... ... *
கம்பமேநடுக்கந்தம்பங்கந்தனையருகன்செவ்வேள் ... *

(இதன்பொருள்.)

(கம்பலையென்பது) பயம்- சததம்- நடுக்கம்- துன்பத்துக்கும்பெயர். (செம்புலமென்பது) பாலைத்திணை- போர்க்களத்துக்கும்பெயர். (தம்பமென்பது) கவசம் - தூணுக்கும்பெயர். (சமழ்த்தலென்பது) வருத்தம்- வெட்கத்துக்கும்பெயர். (கம்பமென்பது) நடுக்கம்- தூணுக்கும்பெயர். (கந்தனென்பது) அருகதேவன்- முருகக்கடவுளுக்கும்பெயரொன்றவாறு. (௱௪௬)

அமரமேவிபுதர்தெவ்வரவந்திதான்கிளியோரூரா ... ... *
மமுதுபாறேவருணவடியாகுமின்சுவைதயுமம்ப ... ... *
ரமலையேயாரவாரமயினியோடுமையுமப்பேர் ... ... *
தமமிருளிராகுவின்பேர் சார்ங்கம்விற்பொதுமால்வில்லாம்

(இதன்பொருள்)

(அமரமென்பது) தேவர்- பகைவருக்கும்பெயர். (அவந்தியென்பது) கிளி- ஓரூருக்கும்பெயர். (அமுதென்பது) பால- தேவருணவு- அமிர்தத்துக்கும்பெயர் - (அமலையென்பது) ஒலி - சோறு- பார்வதிக்கும்பெயர். (தமமென்பது) இருள்- இராகுக்கோளுக்கும்பெயர். (சார்ங்கமென்பது) விற்பொது - திருமால்வில்லுக்கும்பெயரொன்றவாறு (௱௪௭)

ஆம்பிரம்புளிமாத்தேமாவாம்புளிப்பினுக்குமப்பேர் ... *
சாம்புபொன்பறையாமென்பதாண்டவங்கூத்தேதாவல் ... *
பாம்பென்பகரைமராளம்பையராப்படமேபசசை ... *
யாம்பியேயொலிகாளாளுமையிராணியுமையிந்திராணி ... *

(இதன்பொருள்.)

(ஆம்பிரமென்பது) புளிமா- தேமா- புளிப்புக்கும்பெயர். (சாம்பென்பது) பொன்- பறைக்கும்பெயர். (தாண்டவமென்பது)

கூத்து- தாண்டுதலுக்கும்பெயர். (பாம்பென்பது) கரா - பாம்பு க்கும்பெயர். (பையென்பது) பாம்பின்படம் - பச்சைக்கும்பெ யர். (ஆம்பியென்பது) சத்தம் - காளானுக்கும்பெயர். அயிராணி யென்பது) பாரவதி- இந்திராணிக்கும்பெயரொன்றவாறு. (ருசு அ)

காமனேவாசவன்வேள்கழுதுந்திப்புலியுமாகும் ... ... *
காமமேவிரகமாசைகணிசசிதான்மழுவேதோட்டி ... ... *
பூமனேபிரமன்செவ்வாய்புரையோமாசிமேழார்மேலோர் ...*
சேமமேகாவலின்பந்தெக்கணம்வலந்தெற்காகும் ... ... *

(இதன்பொருள்.)

(காமனென்பது) தேவேந்திரன் மன்மதன்-வண்டு- திப்பிலிக்கு ம்பெயா (காமமென்பது) காமநோய்- ஆசைக்கும்பெயர் (கணிச சியென்பது) மழு-அங்குசத்துக்கும்பெயர். (பூமனென்பது பிர மதேவன் - செவ்வாய்க்கும்பெயர். (புரையோரென்பது) மேன்மக்க ள்- மேன்மக்கட்கும்பெயர். (சேமமென்பது) காவல் - இன்பத்து க்கும்பெயர். (தெக்கணமென்பது) வலப்பக்கம் - தெற்குக்கும் பெயரொன்றவாறு. (ருசு௯)

காமுகன்விடன்வேள்மாலாங்காதென்பகொலையுங்காதுங் *
கோமளம்பசுவனப்புக்கூறியவிளமைக்கும்பேர் ... ... *
நாமமாங்கலித்தன்மிக்குநற்பொலிவெழுச்சியோசை ... *
மாமையேநிறம்வனப்பாமலயசஞ்சந்தந்தென்றல ... ... *

(இதன்பொருள்.)

(காமுகனென்பது) தூர்த்தன்- மன்மதன் - திருமாலுக்கும்பெ யர். (காதென்பது) கொலை - காதுக்கும்பெயர். கோமளமென்ப து பசு- அழகு-இளமைக்கும்பெயர். (கலித்தமென்பது) மிகுதி- பொலிவு- எழுச்சி- சத்தத்துக்கும்பெயர். (மாமையென்பது நிற ம்- அழகுக்கும்பெயர். (மலயசமென்பது) சந்தனமரம் - தென்ற லுக்கும்பெயரொன்றவாறு. (ருருய)

மகரவெதுகை - முற்றிற்று.

யகரவெதுகை.

காயமெய்வின்வெண்காயம்பெருங்காயங்கறிகரித்த ... *
னேயநெய்யெண்ணெயன்பாநிறமென்பமருமங்காத்தி ...*

நேயமேகவற்றிற்றுயமாதாயமாதர்கூட்டஞ் ... ... *
சாயமென்பதுமேம்பாடுதருமழகுடனேமென்மை ... *
(இதன்பொருள்.)

(காயமென்பது) உடல்- ஆகாயம்- வெண்காயம்- பெருங்காயம் மிளகு- கரிப்புக்கும்பெயர். (நேயமென்பது) நெய்- எண்ணெய் அன்புக்கும்பெயர். (நிறமென்பது) மார்பு- பிரகாசத்துக்கும்பெயர்- (ஆயமென்பது) கவற்றிற்றுயம்- இலாபம் - பெண்கள்கூட்டத்துக்கும்பெயர். (சாயலென்பது) மேம்பாடு- அழகு- மென்மைக்கும்பெயரொன்றவாறு. (எருயக)

வயநீர்புட்பொதுவலிப்பேர்வயல்வெளிபழனமும்பேர்...*
சயம்வெற்றிசருக்கரைப்பேர்சடமுடல்வஞ்சம்பொய்யா *
நியமமேநியதிவீதிநிச்சயநகரங்கோயி .. .. *
லியமென்பவொலிமவார்த்தைவாச்சியமிம்மூப்பேரே..*
(இதன்பொருள்.)

(வயமென்பது) நீர் - பறவைப்பொது - வலிமைக்கும்பெயர். (வயலென்பது) வெளி - கழனிக்கும்பெயர். (சயமென்பது) வென்றி - சருக்கரைக்கும்பெயர். (சடமென்பது) சரீரம் - வஞ்சனை- பொய்க்கும்பெயர். (நியமமென்பது) செய்கடன்- தெரு- நிச்சயம்- பட்டணம் - கோயிலுக்கும்பெயர். (இயமென்பது) சத்தம்- சொல்- வாச்சியப்பொதுவிற்கும்பெயரொன்றவாறு. (எருஉ)

அயமென்பநீர்தடாகமாடுவெம்பரியிருப்பாங் ... ... *
கயமேமென்மைகுளமேயாழங்களிறுகீழ்பெருமைதேய்வாம்..*
பயமென்பசுதைநீரச்சம்பாலொடுபயன்பேரைந்தே ... *
யயனமேவழியிருமமாண்டினிற்பாதிக்கும்பேர்... ... *
(இதன்பொருள்.)

(அயமென்பது) நீர்-குளம்-ஆடு-குதிரை- இரும்புக்கும்பெயர். (கயமென்பது) மேன்மை-குளம்- ஆழம் -யானை -கீழ் -பெருமை- தேய்வுக்கும்பெயர். (பயமென்பது) அமிர்தம் -நீர்- பயம்-பால்- பயனுக்கும்பெயர். (அயனமென்பது) வழி - வருடப்பாதிக்கும் பெயரொன்றவாறு. (எருஙா)

பயிரொலிபயிலேலைபைங்கூழ்பறக்கும்புட்குரலிந்நாற்பேர்.*
கயினியேயத்தநாளுங்கைம்மையுமிருபேர்காட்டும்.... ....*

வயிரமேசெற்றங்கூர்மைவச்சிரமோர்மணியுமேசெரு ... ... *
கயிலபிடர்த்தலையேபூணின்கடைப்புணர்விருமேயாதானே. *

(இதன்பொருள்.)

(பயிரென்பது) சத்தம்-சைகை-பயிர் பறவைக்குரலுக்கும்பெயர். (கயினியென்பது) அத்தநட்சத்திரம் - கைப்பெயரணுக்கும்பெயர். (வயிரமென்பது) சலஞ்சாதித்தல்-கூர்மை வச்சிராயுதம் வச்சிரமணி மரவயிரத்துக்கும்பெயர். (கயிலென்பது) பிடரி- ஆபரணக்கடைப்புணர்வுக்கும்பெயரொன்றவாறு. (௱௫௪)

ஐயமேபிச்சையேற்கும்மோடனுமானப்பிச்சை... ... *
யையனேமூத்தோன்சாத்தனட்டனீச்சுரனுற்றபேரே ... ... *
தொய்யமேலவுழவுஞ்சேறுந்துயரமுமகிழ்ச்சியும்பேர் ... *
மொய்செருக்களம்போரியானைமூசல்வலியொடுதிரட்டபேர்

(இதன்பொருள்.)

(ஐயமென்பது) பிச்சையேற்கும்பாத்திரம்- சந்தேகம் பிச்சைக்கும்பெயர். (ஐயனென்பது) மூத்தோன்- ஐயனார் - தகப்பன்-சுவாமிகளுக்கும்பெயர். (தொய்யலென்பது) உழவு - சேறு - துன்பம்-களிப்புகளுக்கும்பெயர். (மொய்யென்பது) போர்க்களம் யுத்தம்-யானை-மொய்த்தல்- வண்டு-கூட்டத்துக்கும்பெயரொன்றவாறு (௱௫௫)

வயவனேவீரனோடுவலியான்காதலனுமாகும்... ... ... *
குயிறலேசெறிதலகூவல்குடைதல்பன்னுதலுற்றபேரே ... *
வயினிடமுதரம்வீடாம்வயாக்கருவருத்தங்காதல் ... ... *
மயலசெத்தைமயக்கம்பேயாமறவரோவயவர்வேடர் ... *

(இதன்பொருள்.)

(வயவனென்பது) வீரன்-வலியன்-தலைவனுக்கும்பெயர். (குயிறலென்பது) நெருங்கல்- அழைத்தல்- குளித்தல - செட்டலுக்கும்பெயர். (வயினென்பது) இடம்-வயிறு வீட்டிற்கும்பெயர். (வயாவென்பது) கருப்பம்-வருத்தம்-ஆசைக்கும்பெயர். (மயலென்பது) செத்தை-மயக்கம்-பேய்க்கும்பெயர். (மறவரென்பது) படைவீரர்-வேடருக்கும்பெயரொன்றவாறு. (௱௫௬)

குயிலேகோகிலமுஞ்சொலலுங்கொண்மூவுந்துளையுநாறபே
வயமாவேகுதிரைசிங்கமதகரிபுலியுமாகும் .. .. [ர்
வியலெனபவிசாலம்பீடாட்வேய்துளையொற்றுமூங்கில்...*
மயிலையேமீனராசிமீனிருவாட்சிமூட்பேர் ... ... *

(இதன்பொருள்)

(குயிலென்பது) ஓர்பட்சி வார்த்தை-மேகம்-துளையுடைப்பொருளுக்கும்பெயர். (வயமாவென்பது) குதிரை சிங்கம்-மெய்யான புலிக்கும்பெயர். (வியலென்பது) விரிவு-பெருமைக்கும்பெயர். (மேவலென்பது உடன்மேவு-மூக்கிலுக்கும்பெயர். (மயிலையென்பது) மீனவிசாசி மீன்-இருவாட்சிக்கும்பெயரென்றவாறு. (௱௫௭)

சயிந்தவங் குதிரைபோ தலைபுமிந் துப்புமாகும் ... ... *
குயந்தமனிளமைமரிகூர வாளுமப்பேர் .. .. *
நயந்தோனே நண்பன்கொண்கனுட்விருச்சிகமேநன்மை. *
பயம்பென்பதானைவீழ்படுகுழிபள்ளமாமே .. ... *

(இதன்பொருள்.)

(சயிந்தவமென்பது) குதிரை- தலை-இந்துப்புக்கும்பெயர். (குயமென்பது) முலை இளமை - அரிவாளுக்கும்பெயர் (நயந்தோனென்பது) தோழன்- கணவனுக்கும்பெயர். (நலமென்பது) தேள்-நன்மைக்கும்பெயர் (பயம்பென்பது) ஆனைவீழ்படுகுழி-பள்ளத்துக்கும்பெயரென்றவாறு. (௱௫௮)

